			ரூபாய்.
கோரிக்கை	44	காட்டுவள மூலதனச் செலவு	35,00,000
ஷ	45	ஓய்வூதியங்களை மொத்தமாக்கிக் கொடுத்தல்.	2,00,000
ஷ	46	அரசு வாணிகத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு.	14,25,00,000
ஷ	47	மாநில அரசு வழங்கும் கடன்களும், முன்பணங்களும்	5,89,00,000

மேற்கண்ட கோரிக்கைகள் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகைகள் வழங்கப்பட்டன.

(7) அறிவிப்பு.

தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின் மீது வாக்கெடுப்பு) மசோதா.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின் மீது வாக்கெடுப்பு) மசோதாவை இப்பேரவைக்கு அறிமுகம் செய்வதற்கும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(8) அரசினர் மசோதா

தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின் மீது வாக்கெடுப்பு) மசோதா.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின் மீது வாக்கெடுப்பு) மசோதாவை இந்த மன்றத்தின் திருமுன் அறிமுகப் படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

The Hon. THIRU K. A. MATHIALAGAN: Sir, I introduced the bill.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இம் மசோதா அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது. பேரவையின் நிகழ்ச்சிகள் இன்று இந்த அளவில் முடிவுற்று, திங்கட்கிழமை காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

(9) பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்

எதுவும் இல்லை.

TAMIL NADU LEGISLATURE LIBRARY
24 JUN 1971